28

ஓம்

திருச்சி.

பரப்பிரம்மணே நம:

ஸ்ரீசச்சிதாநந்த சுவாமிகள்

# இணைமணிமாலை.

திருத்துருத்தி மெய்கிரிப்பீடம்
சுவதந்திர சுவாமிகள் ஆதீனம்

ஸ்ரீமத்-சித்
சச்சிதாநந்த சுவாமிகள் மீது
டி சுவாமிகளின் மாணவர்களுள்
ஒருவராகிய

வேதாந்த சற்காரம்-வித்தியாசக்தம்
ஸ்ரீமத்-வேலாயுத சுவாமிகளால்
இயற்றப்பட்டு

சென்னை
பூலோகவியாஸன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

1912

இதன் விலை] [அணா 2

ஓம்.

தத்சத்.

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீசச்சிதாநந்த சுவாமிகள்

# இணைமணிமாலை.

திருத்துருத்தி பிங்கிரபீடங்
கரபாத்திர சுவாமிகள் ஆதினம்

---

ஸ்ரீமத்-ஈதூர்
சச்சிதாநந்த சுவாமிகள் மீது
ஷை சுவாமிகளின் மாணவர்களுள்
ஒருவராகிய

---

வேதாந்த ரத்நாகரம்-வித்தியாநந்தம்
ஸ்ரீமத்-வேலாயுத சுவாமிகளால்.
இயற்றப்பட்டு

---

சென்னை
பூலோகவியாஸன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1912

---

இதன் விலை] [அணா 2.

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநம:

# சிறப்புப்பாயிரம்.

இந்திரபீடம் ஈசூர்

ஸ்ரீ-சச்சிதாநந்தசுவாமிகள்

பிரதமமாணாக்கர்

ஸ்ரீமத்-அ. முநிசாமி நாயகரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

தானேதா னாக்கி வைத்தான் சச்சிதா நந்தகுரு
தானேனைகம் மாறாய்த் தழைக்குஞ்சொல்—லானே
யிணைமணி மாலை யியற்றினன்காண் வேறு
மனமணியா மாதரவான் மற்று.

---

ஷை சுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

ஸ்ரீமத்-வித்வான்

சே. சேஷையப்பநாயகரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பணைமலையின் மணியினொடு டலைமணிசேர்ந் தவிர்
மாலை பரந்த தன்றித், துணைவிழிநீ ராலுடலந் தோயடி
யர் பர்மாலை துலங்கச் சொற்று, ணைவரிய பரஞ்
சோதியாஞ்சச்சி தானந்த னளிர்பூர் தாளில், இணை
மணிமா லையெனவே லெழில்வேலு சாமியிவ னேத்
தற கன்றே.

ஷடி சுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

ஸ்ரீமத்-பி. ஆறுமுகமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

உணவிலதாந் தன்னிலையை யுற்றவேலு சாமி
யிணைமணிமா லைபுகன்றா னெங்குந்—துணைமனத்தா
லோர்ந்துண் முகமாதற் குண்டோவிந் நூலன்றி
யார்ந்தவறு பூதிநிலைக் கங்கு.

---

இந்நூலாசிரியர் மாணவருள் ஒருவராகிய

பிரம்மை

ஸ்ரீமத்-ஆத்மாநந்தம்பிள்ளை யவர்கள்

இயற்றிய

அறு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பூவகத்தே யளிபுலம்பு வாவியுடை யணிதிகழும் பொழிலே யிசூர்க், கோவகத்தே யெழுசச்சி தாநந்த குருசிவத்தின் குழகப் பாதம், பாவகத்தே புகழ்ந்து கப்பா னரியவிணை மணிமாலை பகர்ந்தா னன்றி, மேவகத்தே யெனையாள்வே லாயுதப்பேர் மெய்ஞ்ஞான வியக்கத் தோனே.

---

சென்னை-ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-கோ. வடிவேலுசெட்டியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

வேலா யுதசாமி வேறற்ற தன்னிலையை
மாலா னவர்நூல் வழியறிந்து—மேலாம்
வழியே யிணைமணி மாலைசொற் றிட்டான்
கழியே ருவகையுறக் கண்டு

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநமஃ.

ஸ்ரீசச்சிதாநந்த சுவாமிகள்

# இணைமணிமாலை.

## சொரூபவணக்கம்.

நேரிசை வெண்பா.

சுகமோடு நித்தஞ் சொலும்பிர காசந்
தகவிபுவா நாமவுரு தார - மிகலரியப்
புத்தியறி யாததுவாய்ப் புத்தி யறிவதுவாய்ச்
சுத்தமொட பாரமிறை சொல்.

அவையடக்கம்.

எக்கலையுஞ் சிக்கறுத்தே யேதமிலா திங்குணர்ந்தோ
ரிக்கவியிற் சிக்குளதென் றெள்ளாரென் - றிக்கவியைப்
புல்லறி வாளன் புகன்றேன் புரைதீர்ந்த
நல்லறி வாளர் நகை.

## நூல்.

### வெண்பா.

பாராரு மேவநிலைப் பாட்டதனால் யானுரைக்க
நேராரும் வாரிதனை நீயெளித்தா - யோராருங்
கோகனகத் தாளைக் குருசிவமே யென்னுள்ள
மாகனக நான்மறமேவ னால். 1

### கலித்துறை.

நான்மறை யந்தம தாம்பொரு ளாயதை நாடுதவ
மேன்முறைக் கண்ணுள நால்வர்க் கிதமுற மேவவுரைத்
தூன்மத சிந்தையூ டாகுல மாற்றி யுவப்புறச்செய்
கான்மலர்ச் சோலை செறிதரு மீசூர்க் கனவெந்தையே.

### வெண்பா.

எந்தைசச்சி தானந்த னேய்ந்தசிதா காயமதைப்
பந்தமறு சிந்தையினிற் பாலித்தா - னந்தமவன்
பொன்னி னிணைத்தாளைப் புந்தி யுரங்கொண்டு
சென்னி மணியணிவேன் றேர். 3

### கலித்துறை.

தேரிற் பரமுயி ராதிப் பரமே திலைச்சகமுங், கூரி
தயமதி லுற்ற குறையைக் கெடவருணற், சோரி
பொழிந்தெணை யாளத் தொழிலாய்த் துவையலை
சூழ், பாரிற் றகுகுரு சச்சிதா நந்தப் பரமனென்னே.

### வெண்பா.

என்னைத் தனியாக்கி யேகவெளி யாயிருத்தித்
தன்னையென் னுட்காட்டிச் சாதித்தா - னன்னோன்
குருராய னென்னப்பன் கோகநகத் தாளி
லுருகிநிற்பே னெக்கால முள். 5

### கலித்துறை.

உள்ள பெருமறை யுட்பொரு ளாயெற் குவந்துதரக்
கள்ளப் புலன்வழி யாசை கடிந்தகக் காசகன்று
வெள்ளப் புவிமிசை வந்தருள் செய்யவே வேண்டுகுரு
வள்ள லடிநன வாதிக னீங்க வணங்குதுமே. 6

### வெண்பா.

நனவாதி நீயாகி னல்குமிவை மூன்றாய்
நனவாதி யாகாயே னாடா - நனவாதி
முக்கண்ணா முன்னையே முந்துகவென் றன்குரவன்
முக்கண்ணா நானாகு முன். 7

### கலித்துறை.

முன்னிப் பணிந்திட நாயேன் முளரி பதமுறையான்
மன்னிய பாரின் மருளற வந்த வருந்தகையோய்
பின்னிய கோசவைம் பீழை பிரியப் பிரியமுடன்
றன்னிய லாக்கி யருள்புரி வாய்சச்சி தாநந்தனே. 8

### வெண்பா.

சித்தேயென் னுள்ளத் தெளிவே பராநந்த
வித்தேமா முத்தே வெளிறில்லா - வத்தனே
தானாகி யெவ்வுயிர்க்குஞ் சான்றாகுந் தற்பரனே
நானாகு மெய்ந்நிலையை நாட்டு. 9

### கலித்துறை.

நாட்பட வாளா நலிதரக் கோடி னமன்கரத்தாற்
கோட்படத் தேகங் கொடுமிடர் கூரக் குறையகலார்
சேட்படு மாலோன் றிசைமுகன் காணாத சேவடியி
லாட்பட வுய்யு நெறிகாணா ரற்ப ரகமுனைந்தே. 10

### வெண்பா.

நைந்துநைந்து நானெனலை நாடிடா வென்றனையே
நைந்தேயா னானலதை நாடியே - நைந்திடா
நானலதை விட்டிங்கே நல்லோர்பா னன்றெளிந்து
நானிலக லெந்நா ளவில். 11

### கலித்துறை.

நவிலரு மாமறை யாதி நவையறு நற்கலையுஞ்
சவலை தருபல மார்க்கமுங் காணுத் தகுபொருளைச்
சிவமா மொருமொழி யாலே தெளிதரச் சீர்க்குருவே
யுவரித் தரைமிசை யாண்டாய்கொல் லோவவென்
[றேற்றமதே. 12

### வெண்பா.

தோற்றத்தா லாமெனவுந் தொட்டறிவா லுண்டெனவு
மேற்ற வுருவமதை யெண்ணுவதாற் - சாற்றுவதெ
னில்லையெனுங் காரணத்தா லேற்காதா லல்லவென்று
லெல்லையிலோ யென்னு மிசை. 13

### கலித்துறை.

இசைக்குங் கருங்குழன் மாதரி டர்ப்பட் டிருந்ததவ
நசைக்குத் திரிதரு மென்னுள மாசுற நன்னளின
நசைக்கு மிணைமலர்த் தாட்பணி யேற்று நனுவினைக
ணசிக்கு வணமரு வீசு ரிறையே நலமறிவே. 14

### வெண்பா.

அறியாமை யாலறி விற்கழி வாமோ
வறியாமை யாதா மறியி - னறிவு
மறியாமை யாமிரண்டு மவ்வறிவே யாகி
லறியாமை யென்சொரூப மா. 15

### கலித்துறை.

ஆறுமுறு வெய்ய பவக்கட லாழடி யேற்கிருநீ
ணேமி யகமதி னீணெறி நேருற நீடுதக
வேமுறு தாளிணைக் காட்கொளு மீசு ரிறைவனடி
மூமுறை யேத்தி யுவந்தன்பா நாட்டுது முன்றலையே. 16

### வெண்பா.

நாட்ட சிவந் தானெனவே நல்லோர்க ளூன்மறையுந்
தேட்டமடை யாதழலுந் தீச்சமயக்-கூட்டமொரீஇப்
பொற்பதத்தைச் சேர்ந்தேன் புனைத்தாள் குருசிவமே
தற்பதமாய் நின்றிலகத் தான். 17

### கலித்துறை.

தானமர் ஞானந் தனையறி யாமலே சாற்றுமல
வூனமர் தோமுட னுற்றேற் குளதா யொருமொழியாற்
றேனமர் தாரணி தேசிக செய்ம்மலர் சேவடியி
னனமர்ந் துய்வகை தந்தரு ணந்தெம லந்தபவே. 18

### வெண்பா.

பஞ்சகோ சம்விட்டுப் பார்ப்பதே பாழாகு
மஞ்ஞனத்தை நானென் றறியாதே - மெய்ஞ்ஞான
சோதிவிட் டார்ந்தொளிருஞ் சொப்பிரகா சத்தனியை
யாதிவிட்டு மாறு தறி. 19

### கலித்துறை.

அறிபடு வைம்பெரும் பூத வகில வனந்தரெலாஞ்
செறிபடு சித்தச் செயலின் செயிறுனை யார்ந்ததனு
லெறிபடு வென்பவ வேலை சிதைந்திட வென்றனையாள்
வெறிபடு பொய்கை வளமீசூர் வேந்த விருந்தவனே.

### வெண்பா.

இருவினையு முக்குற்ற மீழ்மலமு நீக்கிச்
சரியாதி நன்மார்க்கஞ் சார்ந்தே - யரிதின்றிச்
சாதனநான் கோர்ந்துநான் றானென தற்பொருளைக்
காதலுடன் சார்வதெப்போ காண். 21

### கலித்துறை.

காண்டகு பாதவ னூழ்புனல் வீழ்ந்தாங் கறைத
லொடு, சேண்டவழ் கொண்மூ விரைந்தொடத் திங்கள்
செலுமெனவே நேர், வேண்டரு மாயையு பாதிக னானே
னன் மேவுறலோ, மாண்டவர் பேணுங் குருபா வந்
தாண் மகிழ்தரவே. 22

### வெண்பா.

வேதாந்தத் துட்பொருளை மேதக்க சற்குருவா
னுதாந்த மீக்குற்றே நானிலகும் - போதாந்த
நாட்டிடவே பொய்ப்போத நாடாது நானதுவாக்
காட்டிடுவான் றன்கழலைக் காண். 23

### கலித்துறை.

கானு முருவதை யூன்றிக் களையக் கவினிலனுட்
டோனு மருவதை யெங்ஙன் றுறப்பன் றொலைவினைக
ளானும் படியிக நன்னெறி நானாய் நயந்திகழப்
பேணுங் குருவே பதமலர் சிந்தைப் பிரியமதே. 24

### வேண்பா.

சிந்தனைக்கு மெட்டாத் திகழறிவே சிந்தையிலென்
பந்தவினை நீங்கப் பலனுறவால் - வந்தெற்குப்
போதித்தா யென்குருவே போதமலர்த் தாடுதிக்க
வேதித்தா யென்மடமை மேல். 25

### கலித்துறை.

மடமுற நானிழை மாறு படும்வழி மாயமனந்
திடமுற நீத மிதுவெனத் தேறத் திளைத்ததிரைக்
கடலுறு நேமி யகமதி றேகங் கவினுறக்கொண்
டிடமுற ஞான மறைதரு மீசா விருசித்தமே. 26

### வெண்பா.

சித்தாகு நானெனலைச் சிந்தித்தே யானுணரா
தெத்தனைநான் கற்றாலு மென்னாகு - நித்த
மடையனெனப் பேர்பெற்றேன் மன்னுகுரு நாதா
நடைப்பிணமாய் வந்துற்றே னன்கு. 27

### கலித்துறை.

நற்குரு ராய நினதிணைத் தாளை நவிறலொடு
பற்கலை யும்புக ழாத்தமே யாதிப் பகரொருநா
னிற்குறச் செய்யி னிடர்ப்பவ மேகு நெறிதெளிந்துங்
கற்கச ஞற்றுப் பிழைபல வாயினுங் காத்தருளே. 28

### வெண்பா.

காரணத்தை யன்றியிங்குக் காணும் பொருளில்லைக், காரணமாய்க் காரியத்தைக் கண்ணுற்றேன் - கோரணையாற், கொண்டுழலுங் கொள்கைதனைக் கோப்புகழுஞ் சற்குருவே, கொண்டுணரக் காரணத்தைக் கூர்ந்து.

### கலித்துறை.

கூரு மிருவினை கூடி மலநிறைக் கொள்ளுமுட
னீருங் கனலொடு காலு நிறைவா னிலமலைவோ
யாரு மறிந்திலர் கொல்லோ விதுநானென் றுருகுவதென்
சீருன் கழனம செய்தேன்செப் பாய்தே சிகநவமே. 30

### வெண்பா.

நவமிகுமோர் சொல்லை நவவிதமா யெற்குச்
சிவமிகுமோர் சற்குருவே செப்பிப் - பவமிகுமோர்
வேலைக்கு வேறுபட மேதினியி லாநந்தப்
பாலைக்கு ளாகிடவே பார். 31

### கலித்துறை.

பார்முத லாகப் படர்பெரு மாயை பகரிலொரு
வேர்பெற வோவியந் தீட்டற் கிடமா மிரும்படம்போற்
சேர்தவ வோங்கும் பிரமமா மத்தாற் செறியுமென்றெ
ஞர்வம னைத்துமே வேறறுத் தாண்டா யருட்குருவே.

### வெண்பா.

வேறு துணைநாயேன் வேண்டேன் குருமிசையின்
மாறு குறைமாற்று மன்னவா - வீறுபடு
மென்னுருவா யானிலகி யேமமுற வெந்நாளு
முன்னுருவாய் வந்தாண் முதல். 33

### கலித்துறை.

முதலென நிற்குந் தருபர மொன்றே முடிவிலதாய்ப்
பதிமுத லாக வறைதரத் தோன்றும் பலவடிவாய்
மதியுரு போாற் கனகமு மண்ணும் வகைபலபோன்
மதியெனத் தன்று மரையடி தந்தனை மண்மிசையே. 34

### வெண்பா.

மண்ணாதி யைந்து மனிதாதி யாய்த்தோற்றப்
பெண்ணு ணலியாய்ப் பிறந்திறத்த - ணண்ணியுமே
தன்னறிவைப் பாராத் தளர்ந்தேனீ குர்க்குருவே
முன்னிலையே யுன்னுவது முன்பு. 35

### கலித்துறை.

முன்னிக் குருவை முழுமனத் தாலு முளரியடி
சென்னி மிசையுறப் பேணிற் பிறவி சிதையுமினும்
பொன்னுந் தருவும் பொருவுற நன்றிப் புவிமிசையின்
மன்னியே சார்ந்து மருவுவோர்க் கீதா மதித்துணரே.

### வெண்பா.

உணர்வதனை விட்டே யுடனுறு நின்றே
னுணர்வாகச் சற்குருவே யுய்ய - வுணர்வீதென்
ருயாத தாறுக்க மாஞ்சுழலிற் பட்டுழல்வே
னோயாப் பிறவிதோறு முற்று. 37

### கலித்துறை.

உற்ற பவக்கட னீக்க வுறுதிப் பலவிருந்துங், குற்ற
முலகுள தென்பதைக் கூறக் குறைத்தலிலார், பற்றிட
மெய்தனை மெய்யாப் பகுத்திடும் பாக்கியனே, தெற்
றெனு மத்துவி தத்தடி தேடினன் றெள்ளறிவே. 38

### வெண்பா.

அறிவாகு மென்னுருவை யாங்காங்கு நேராப்
பிறிவாகு மிவ்வுருவைப் பேணி - யறிவிழந்தேன்
மெய்க்குருவே யென்னறிவை மேவிமேய யிவ்வுருவைப்
பொய்த்துயில்போற் போகப் புகல். 39

### கலித்துறை.

போதியை யுன்று ளூரமெனக் கொண்டு புகலினிதங்
காதுவெந் நோய்க ளறுமெனத் தேர்ந்துங் கருதிமனம்
பாதமே போற்று விழுதைய னேனும பரவியசீ
ராதனே வந்திங் கருடனைச் செய்நா னறிவுறவே. 40

வெண்பா.

நான்முதலா யெங்குமென ஞானமறை நூனவில
வூன்முதலா மித்தேக முற்றேனே - நான்முதலா
வூன்முதலை விட்டுநா னுள்ளபடி சற்குருவே
நான்முதலா யாவதெந்நா ணாட்டு. 41

கலித்துறை.

நாட்ட நமியுறி லேதய னுரு நமிறவிர்ந் தா
நாட்ட மயனுறி னுமட்டுவா நண்ணு நவைபிறவி
நாட்ட மயலொரீஇச் சச்சிதா னந்த னறுங்கமலத்[தே.
தாட்டுணை யேத்துதும் பாரினில் வேறென் றவமுள

வெண்பா.

தானந் தவமறியேன் சற்சனரை நாடறியேன்
ஞானமென்றே யென்னை நவிலறியேன் - ஞானம்
பெறுந்தன்மை யென்றோகாண் பேணுப் பவமு
மறுந்திடற்கிங் காமோ வருள். 43

கலித்துறை.

அருவே வடிவா யமைதர நெஞ்சே யருங்குரவ
னுருவா ருபய மலர்கழற் கன்புள் ளுடைத்தொழும்பை
யொருவா தவர்பணி யேற்கி னுறுவா யுரம்பெருகி
மருவா வருமன மாயையு மேகு மலமூன்றுமே. 44

வெண்பா.

மூன்றுவத்தை யாநிலையின் மூதறிவைக் காணுதா
மூன்றவத்தாப் பேய்க்கோல முந்திடவே-யூன்றிங்கே
யெத்தலங்கட் சென்றுறு மெத்தவங்கள் செய்தாலும்
பித்துமனம் போகாதே பின். 45

கலித்துறை.

பின்னவி லாறும் பிறையும் பிறங்கும் பெருமை யனை,நின்னளி னத்தா ளிணைகதி யாக நினைந்துருகாப், புன்னூறு தேகஞ் சதமென வாழ்வேற் புரந்தரவான், கொன்றொரு சொற்பா லதுகொடு வந்தாய் குருமிசையே. 46

வெண்பா.

குருவா யெனக்குவந்து கோமிசையி னாரே
மருவா யிலகவரு மண்ணன் - மருவேய்
வனசமலர்த் தாளை மனதகமே கொண்டு
தினமுநம செய்திடுவேன் றேர்ந்து. 47

கலித்துறை.

தேர்ந்திடிற் சாக்கிர மாதியச் செப்புந் திரயமதாற்
றோன்றிடுந் தூலமாய்ச் சூக்கமச் சூனியத் தோற்றமதி
னோர்ந்திடுங் காட்சிக ளெங்கனு நீக்கமி னின்றறிவாய்ச்
சார்ந்திட வந்தருள் செய்வோன் றாணியிற் சாமி
[யென்னே. 48

வெண்பா.

என்மருளை யன்றி யிருப்பிற் சகமனைத்து
மென்மருளை நீக்கி யிணையநா - னின்புருவாய்ச்
சற்குருவே யென்றடைவேன் றுவி னினதருளா
லெற்கருவே யெய்திடவே யேய்ந்து. 49

கலித்துறை.

வேத திசைமுக னேடுபல் விண்ணோர் வியனுலகஞ், சாதனை யாகத் தினமனம் வேண்டுபு சற்குருவின, போதடி யன்றிமற் றேதும் பொருளாப் பொருந்திலதா, லாதலி னெஞ்சே யவைதலைக் கொள்ள லரும் பொருளே. 50

வெண்பா.

பொருளல்ல வற்றைப் பொருளல்ல வென்றும் [ணப்
பொருளைப் பொருளென்றும் போற்றிப் - பொருள்கா
பார்த்திருந்த வென்னைப் பதித்தா யொருமொழியால்
பார்த்திட்டேன் பல்வடிவைப் பாங்கு. 51

கலித்துறை.

பற்றும் பவநோ யிரியப் பனிமலர்ப் பாதமதைப்
பற்று மடியவர்க் கென்றும் பரிவருள் பண்ணவனைக்
கற்றவர் போற்றும் விமலனைத் தேடிக் கழல்பணிந்திங்
குற்றவர் நற்று மரையடித் தாழ்வோர்க் குவமை
யென்னே. 52

வெண்பா.

என்னிலைமை யென்றறிவே னேமமுறு நல்லோர்க
டன்னிலைமை தாமறிந்த தன்மைபோ-னண் ணுவதால்
விட்டிடுமோ வுற்பவமும் வேலை யுலகத்திற்
றட்டிடுமோ வென்னிலையுந் தான். 53

கலித்துறை.

தாகமாய் நாடித் தருநிழல் சார்வோர் தமக்குமிடி
யாகிய துன்ப மழிதரு மற்றென் றணைவ துண்டோ
வாகம வேத மறையறை நான்கு மனைத்துமுண்டாந்
தேகமா ரீசூர்ச் சிவனடி நீழற் சிறப்பறியே. 54

வெண்பா.

அறியாமைக் காரணமா யாங்கதுவாய் நின்றே
னெறியான மோனநிலை நேரா - தறிவிழந்தே
னென்றறுவே னென்னறிவை யேமமுறுஞ் சற்குருவே
நின்றுய்ய நின்னருளா னேர். 55

### கலித்துறை.

நேர்தரு தாபத் திரயமா மாறு நெருப்படைந்துஞ்
சூர்தரு வாழ்வைச் சுகமென வெண்ணிச் சுழலுநெஞ்
சீர்தரு சற்குரு நாதன் றிருவடி தேடிநித [சே
மோர்தரப் பேணு விடிவிலை யின்பமெய் யெங்கணுமே.

### வெண்பா.

எங்கெங்கே யாய்ந்திடினு மேகவெளி யொன்றனைய
தெங்கெங்கே யாய்ந்திடினு மென்னுருவே-பொங்குமகச்
சங்கற்ப மன்றிச் சகமாதி முப்பொருளுஞ் (ச்
மிங்கற்ப மேனு மிலை. 57

### கலித்துறை.

இலையெனு மாயை தமமுதன் மூன்று யிடுகுணத்தா
லலைவுறு பாரோ டுயிர்பர மாகி யமையுமதைக்
கலைபல வானு மருட்குரு வானுங் களையினெஞ்சே
நலையுறு ஞான நமதுரு வாகுமிஞ் ஞான்றினிமேல். 58

### வெண்பா.

ஞாலமதை நம்பிநம்பி ஞானமதை யேயிழந்த,
கோலமதைக் கொண்டழியுங் கோனெஞ்சே-மேலறி
வாற்,றன்னிலையைக் கண்டுணரச் சற்குருபாற் சென்றடு
த்தாற், றன்னிலையே யென்றுந் தரும். 59

### கலித்துறை.

தருபவ மீடளை மூன்றிற் சிதறித் தவபிணியான்
மருமலர்த் தாளை மறந்தக மாழ்கு மயலறவிக்
குருமிசை வந்திக் கொடியனை யாள்வான் குலைவிவொரு
வருமொழி யாய வமுதுண செய்வ தவனருளே. 60

வெண்பா.

அவயவத்தைத் தள்ளி யறியேனிங் கொன்றை
யவயவியா யெங்ங னறிவேன்-சிவகுருவே
தன்னில் வியாபகமாய்த் தானே யுணர்வொளியாய்
மன்னின் மருளேதா மன். 61

கலித்துறை.

மன்னு மறிவுரு வானவ ரென்று மகிழவகங்
கன்னலுந் தேனுக் கனிபிழி சாறுங் கலந்ததெனத்
தின்னத் தெவிட்டா வமுதேசீர்த் தெய்வத் திருப்பிழம்
தன்னிலை குன்று வருசச்சி தானந்தத் தண்ணறிவே.(மே

வெண்பா.

அறியாமை தன்னை யறிவாற் கரைத்திங்
கறிவாத லென்றுறுமோ வந்தோ - வறிவா
லழிப்பதற்கு நானறியே னுற்றுகுரு நாதா
பழிப்பா மறியாமை பார்த்து. 63

கலித்துறை.

பாரோடு மூன்றும் பொருளல வென்று பகர்ந்திடவே
சீரு ளேவுரு வாய்திகழ் வந்தென் சென்மபிணி [த்
வேரோடு நீங்கிட விண்ணோ ரறியொணா மெய்ந்நிலையை
ரனாய்த் தந்தளித் தோனடி துன்பறச் செப்புதுமே.

வெண்பா.

துன்பமய மாம்விடயந் துன்பமதாய்த் தோற்றுதிங்
கின்பமய மாய்ப்பார்ப்ப தின்னலே - யன்புடனே
வானந்த சற்குருவே யாசேகி நிற்பதென்றோ
தானந்த மில்லாக் கனி. 65

கலித்துறை.

தனித்தறி வாகி யெதிர்முக நோக்கத் தனதுருவாய்ச்
சனித்திடு மெல்லாஞ் சுகமொடு துக்கந் தருவிடய
மனித்திய மென்ன வதன்கடை நீங்கியமைந்த தன்னைத்
தனித்தசித்சத்தெனுங் கோனடிமன்சிரந் தங்கிடவே.

வெண்பா.

மண்ணுடலை நானு மதித்துக்கா மப்பசியா
லெண்ணு மிடருளே னீடேற - நண்ணரிய
சற்குருவே யித்தேகஞ் சாராது நானுய்ய
நற்பதமாய் நிற்குநெறி நாட்டு. 67

கலித்துறை.

நாட்டிய வேத னகிலம னைத்து நவிலமுயற்
கோட்டிய லொக்கு மெனமுனங் கூறிக் கொடியனனி
யீட்டிய துன்பமி யாவு மழுங்குவா னென்றலையிற்
சூட்டிய நின்று மரையடிக் கொப்பெதைச் சொல்லுவ
[னே. 68

வெண்பா.

ஒப்பில்லா நான்மறையு மோதரிய வோர்பொருளைத்
தப்பில்லா வாரியது தானெனவே - செப்பியநற்
சீராருஞ் சற்குருவே தேரினுனக் காராவார்
நீராரும் வையத்து ளோர். 69

கலித்துறை.

சேர்ந்த வினையா லுடலதைக் கொண்டிந் நிலமிசையிற்
சார்ந்த சுகத்தைச் சதமென வாழுந் தகையனென்னை
யேய்ந்த தனதெழி றொண்டருக் குள்ளே யிருத்தியருள்
கூர்ந்த கருணைய நானுன் பதமலர் கொள்ளுவனே.

வெண்பா.

நானலதை நானென்றான் ஞானமதை யெட்டுவனோ
வீனசுக மென்னைவிட் டேகுமோ - கோனேகேள்
கத்தபமாய் நின்றாற் களங்குலையாப் பேறுறுமோ
வத்தமென்பா வில்லாமை யால். 71

கலித்துறை.

ஆல நிழலிடை யாய்நல நால்வர்க் கமைதிபெறக் (யனே
கோலக் குருநிழற் காட்டியே யாட்பெருங் கொள்கை
சாலப் புகழ்பெறுஞ் சச்சிதா நந்தத் தனிமுதலே
தாலத் தெனைக்காப்ப தின்று மையடித் தண்ணிழலே.

வெண்பா.

தன்னைப் புலவரெனத் தானகங்கொண் டேயிருக்கின்
றன்னை யெவனென்று தானுணர்வேன் - றன்னை
யறியநெறி தந்தா யவனிமிசை நன்று
பொறியதனிற் பூரணனே பொன். 73

கலித்துறை.

பொன்னைப் புவியைப் புணர்மா தரையென்றும்
போற்றிதினம், மன்னும் பொருளெனக் கொள்கை மட
னேன் மயலொருவிப், பின்னம் படமா மறைமொழி
யத்தாற் பிறங்குநெறி, யன்னை யெனவக் கருட்குரு
தாட்சிர மாக்குதமே. 74

வெண்பா.

மாகமதேநானென்ற மாண்புடையார்கொள்ளுநடைமை
சோகமதாற் றேகமதாய்த் தோன்றினனே - பூகமிலா
வன்னெஞ்ச ஞானும் வாய்மையினா லாள்குருவே
நன்னவினை நற்றுணைமை. 57

### கலித்துறை.

நிட்டும தென்று திசைமுக னோடா ரணனுஞ்
சமரம தெய்தியுந் தாமரி தாயுணர் தத்பதத்தைத்
சமதம மாகிச் சதுட்டய மாயுந் தகையதின்றி
யிமைநொடிப் போழ்தி லுணர்த்தெனை யாண்டெழி லா
(ரியனே. 76

### வெண்பா.

ஆரா வமுதே வன்பர்க் குகந்தருள
பேரா யிரம்படைத்த பெம்மானே - நீரார
போதநெறி யானுன் போதமலர்த் தாணிதமே
காதலுற வோதிடுவேன் காண். 77

### கலித்துறை.

காணுறு மாயைக் கடலதி லாழ்ந்து கவன்றுபிறை, வாணுத லார்க்குள் ளுடைந்துறும் வம்பனும் வண்மை பெறச், சேனுயர் மெய்யடி யாரவை சேர்த்திடைச் சேருமலக், கோனுள நெஞ்சற வான்குரு தாட்சிரங் கொண்ணிதமே. 78

85755

### வெண்பா.

நித்தியனே நின்மலனே நேரிலரு ளாதியனே
சத்தியனே தன்மநெறி தக்கவனே - யித்தரையிற்
பத்திநெறி யானுன்றன் பாதம் பெறவருள்
முத்தி முதலுடையோய் முந்து. 79

### கலித்துறை.

துப்புர வாகும் பிரமமே யானுய்த் துலங்குவனை
மொப்புர வாகச் சுகநிலை போத முணர்த்தியெனை
வெப்புர வாகத் தியற்கையி னீக்கி வெளிறறுப்பா
னொப்புயர் வாக விலையென வாண்டா யொருகணத்தே.

வெண்பா.

கண்ணி னயற்பொருளைக் கண்டு முதலாக
நண்ணு மெனையிங்கு நானறியே - னண்ணால்
சிவமாக நானுய்யத் தேறும்வழி யோர்ந்து
நவமாக வெற்கருளிந் நாள். 81

கலித்துறை.

நாளும் பொருளொடு தேயமு மில்லை நமைத்தவிரச்
சூளுந் தரவிது மெய்யென காட்டிச் சுழலுமனக்
கோளுந் தரமறத் தாட்கொள நாயேன் குலம்விளங்கத்
தாளுந் தருவீசூர்ச் சச்சிதா நந்தனைத் தாழுமினே. 82

வெண்பா.

தாழ்வாம் வினைவயத்தாற் றுக்குண் டிருமாயை
வாழ்வே தகுதியென்று வாழ்வேனை - யேழ்பிறவி
யுஞ்சுபோ வென்றொருசொல் லோதுங் குருபதத்தைத்
தஞ்சமென்றே நெஞ்சேநீ தாழ். 83

கலித்துறை.

தாழும் புனற்சடை யானுந் தகுமா தவனயனுங்
கேழும் புரந்தரன் மாதவர் மெய்யோ கியரெவருஞ்
சூழு மொருபெரு ஞானச் சுடரே சுகமதியே
காழுன் பதநம செய்யெனைக் காவிங் கயர்வறவே 84

வெண்பா.

அய்யகோ வென்னமதி யாழ்ந் திட்டே னென்மயலின்
மெய்யா வுடலன்றி வேறறியேன் - பொய்யுடலை
நண்ணாது சற்குருவே ஞானமதா மென்னறிவாய்
நண்ணுவ தன்றோ நலம். 85

### கலித்துறை.

நலனுறு தேவர் மனிதர்வி லங்கு நரகரொரு
புலனுறு தாவர மாதியாந் தோற்றம் புகுந்திளைத்திங்
கலனுறு நாளிவ ணைய்மலர்த் தாளெனக் காற்றியசீர்
புலனுற வாண்டிடுஞ் சச்சிதா நந்த புகல்வழிதன்னே.

### வெண்பா.

எனக்கினிய மானவெலா மென்னுருவாய்க் காணத்
தனக்கென்று தாணளினந் தந்தான் - கனம்பெறுசீர்த்
தேனூர் மலர்வாவி சேர்பொதும்ப ரோங்கிசூர்க்
கோனு யருளுசிவக் கோன். 87

### கலித்துறை.

சிவமிகு மிந்திர பீடத் தினகரன் செம்மலென
நவமிகு நாகை யருணு சலன்பின் னவில்பிறைசைத்
தவமிகு ஞானத் தகையரு ணுசலன் றண்ணடிபின்
றவறறுத் தாளீசூர்ச் சச்சிதா நந்தத் தகுசுயம்பே. 88

### வெண்பா.

சுயஞ்சோதி நானென்றுய் சோதித்துக் காணு
வியந்தயலே நானென்றேன் வீணி - னயந்தருமோ
வெய்ய பிறவிதனை மேவாது சற்குருவே
யுய்ய வகந்தருளை யோது. 89

### கலித்துறை.

ஓது மறைப்பொருள் காண்பா னுஞற்றிநூ லோதிபல
தீதி லறிவே பொருளெனத் தேறு திளைக்குநர்க
ளேத முறுபவ மேகித்தா னாக வினையறுசீர்
வேதமொழிந்தெனை யாள்சச்சி தாநந்த மெய்க்குருவே.

வெள்பா.

மெய்ப்பொருளே யான்மனிலை மேதினியி னீயென்றாய்
பொய்ப்பொருளாம் பாராதிப் புக்குழன்றே-னெய்ப்புற
நந்தவில்சீர்ச் சச்சிதா நந்தகுரு வேயருள்வாய் (மேவ
சுந்தரமு நின்றாள் சரண். 91

கலித்துறை.

சாணுறும் பக்குவர் வாழ்ந்திடத் தன்னரு டந்தபயம்
வரமிகு வார்த்தை வழங்கி வருமன மாயையுடன்
றரமறு வீடணைத் தாபத் தழலுந் தபவருளும்
பரமுறு சச்சிதா நந்தவி சூரனைப் பற்றுதுமே. 92

வெள்பா.

ஊனமதி யேகவிங் குண்ணு னடைகிலனை
யூனப் புடனை யுற்றேனே - யீனமற
வெந்தாய் குருசிவமே யேமமுற நாணுளுஞ்
சொந்தமதாய் நானிலகச் சொல். 93

கலித்துறை.

சொல்லும் பொருணிலம் பெண்ணொடு சூழ்கரு மற்றெவையும், புல்லுறு வாழ்வின் திரசாலம் பொய்யாய்ப் புகலிகழ, னல்லிசைத் தொண்ட ரவையிடை நன்னென நன்றருளும், பல்வள மாமீசூர்ச் சச்சிதா நந்தப் பாசிவமே. 94

வெள்பா.

சிவமெனமுன் வந்தெம்மைச் சீர்திருத்தி யாண்ட
நவமெனுமென் சச்சிதா நந்த - பவமாகும்
வேலையிலே யாழேன் விரும்பியுளேன் காலையினு
மாலையினுங் காரு மனை. 95

கலித்துறை.

மறைவளர் வேதன் முதலிமை யோர்கள் வணங்கிடுதம்
புரையறுவுள்ளத் தொளிர்குணபொற்பே புகழுமிசை
யுரைதரு மன்பர் துதிபெற வோங்கு மொளிர்மதியே
விரைமலர் வாவித் திகழ்பொழி லீசூர் விழுமியவே. 96

வெண்பா.

வேண்டு மடியேனை வேலைக் குருவுலகி
லாண்ட குருமூர்த்த மாமிறையே - மாண்ட
நளினபத மூண்மறவே னந்துதொல்லை யுாய
வெளிறக மேகிடவே மேல். 97

கலித்துறை.

மேலுல காதி யுயிர்பர மாகி விளக்கமுறுஞ்
சாலுள வெல்லாம் பிறங்கிடத் தானே சமத்துருவாம்
வாலெனும் பூரண வாழ்வே மலமூன்று மேகவுடற்
கோலம தாகியே யேழா நிலத்தார் குருசிவமே. 98

வெண்பா.

ஏதுக்கோ விவ்வுடல மேற்றே னிருவுலகில்
வாதுக்கோ வம்பான வாய்மையொரீஇக் - கோதற்றே
னெந்தா யருள்மூர்த்தி யென்னிலையாய் நின்றிலக
வந்தாள்வாய் நன்றே வலிந்து. 99

கலித்துறை.

வலிமிகு மாயையே பாழ்ப்பட வந்து வரம்பிலதா
யொலிமிகு கஞ்சு மூலகினி லன்ப ருறுகிட்டையின்
மலியொளிர் தன்னிலைத் திரமே யேறி மகிழவருள்
பலஞெளிர் சோலை செறிதரு மீசூர்ப் பரம்பரனே. 100

—०ः०ः०—

## இணைமணிமாலை.

### வாழி.

**வெண்பா.**

வாழி குருநாதன் மாண்பார் மறைநாளு
மாழி குருவுலகி லான்றோருங் - வாழி
யுரியபடி கேட்கவே யுற்றோரும் வாழி
பிரிய மிதனைப்படித்த பேர்.

ச ம் பூ ர் ண ம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீசச்சிதாநந்த சுவாமிகள்
இணைமணிமாலை.
முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மகா குருபூசையிற் செய்யுங்கிரியை.

ஓர் பீடப்பலகையின்மேல் ஓர் துண்டு வாழையிலையைவைத்து அதன்மேல் பச்சரிசிபரப்பி அதன் மேல் ஓர்பத்திரம் வைத்து அதன்மேல் நூல்சுற்றிய கலசத்தில் ஜலம் விட்டு வைத்து அதன்மேல்மாவிலை வைத்து அதன்மேல் இளநீர் வைத்து, விபூதிப் பட்டங்கட்டிச் சந்தனம் அக்ஷதையிட்டுப் பட்டுவஸ்திரம் சாற்றிக் கலசம் நிறுத்திப் புஷ்பாலங்காரம் பண்ணியெதிரில் இரண்டு வட்டிலில் அர்க்கிய தீர்த்தம் வைத்தல் வேண்டும். அவற்றிற்கு எதிரில் தீர்த்தம் விபூதி சந்தனம் அக்ஷதை இந்நான்கையும் நான்கு கிண்ணங்களில் வைத்து நைவேத்தியமும் தாம்பூலமும் வைத்தல் வேண்டும்.

இங்ஙனஞ்செய்த கலச ஆவாகனத்தை உபாசனாமூர்த்தமாகப் பாவித்து அபிஷேகக் கிரிகையும் நைவேத்திய ஆராதனையும் செய்தபின்பு ஒவ்வொருவரும் ஷ தீர்த்தம் விபூதி சந்தனம்அக்ஷதை இவற்றால் அர்ச்சனைசெய்து புஷ்பம் சமர்ப்பித்தல்வேண்டும். ஈற்றில் ஒருவர் அஷ்டோத்திரஞ் சொல்ல ஒவ்வொன்றற்கும் ஒவ்வோர் புஷ்பத்தைக் கலசத்தின் அடியிற் சமர்ப்பித்து நமஸ்கரித்தல் வேண்டும். பின்பு யாவரும் பத்திரங்களைக் கையிற் கொண்டு பிரதக்ஷணஞ் செய்து வருகிறபோது மேற்படி பரம்பரைத் தோத்திரங்களைச் சொல்லிப் பின்பு கைகளிலுள்ள பத்திரங்களைக் கலசத்தின் அடியிற் சமர்ப்பித்து நமஸ்கரித்து குரு தியானத்தோடு விபூதிப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சுபம்!

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நிர்க்குண அஷ்டோத்திரம்.

ஓம்.

ஞானஸ்வரூபாயநம :
ஆநந்தஸ்வரூபாயநம :
ஆத்மஸ்வரூபாயநம :
கூடஸ்தாயநம :
அகண்டாயநம : 5
அபரிச்சின்னாயநம :
ஆதியேநம :
அநாதியேநம :
காரணாயநம :
அகாரணாயநம : 10
அஹேயாயநம :
அகர்த்தாயநம :
அகர்மணாயநம :
அக்ரோதாயநம :
அவ்யாகிர்தாயநம : 15
அவாங்மநோகோசராய [நம
அசங்காயநம :
அசரீராயநம :
அக்ஷராயநம:
அசலாயநம : 20
அச்சுதாயநம :
அசம்சாரியாயநம :
அணுவேநம :
ஸ்தாணுவேநம :
அத்வைதாயநம : 25
அநந்தாயநம :

ஓம்.

அநாவிர்தாயநம :
அநாதிமுக்தாயநம :
அநுபாதேயாயநம :
ஏகஸ்வரூபாயநம : 30
அநேகஸ்வரூபாயநம :
அபரோக்ஷாயநம :
அபயாயநம :
அபேதாயநம :
அப்ரவிர்தாயநம : 35
அப்ராணாயநம :
அப்ரமேயாயநம :
அபோக்தாயநம :
அமநஸாயந :
அமிர்தாயநம : 40
அலோபகாயநம :
உந்நதாயநம :
ஏகாத்மநேநம :
சர்வாத்மநேநம :
சர்வக்ஞாயநம : 45
சர்வகதாயாம :
சர்வாகாராயநம :
சர்வாவாபாயநம
சர்வகாரணாயநம :
சர்வசமநாயநம : 50
சர்வாதாராயநம :
சர்வாதிஷ்டாயநம :

# ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகள் இணைமணி மாலை.

ஓம்.

சத்தேயாயநம :
சக்தியாயநம :
சச்சிதாநந்தாயநம : 55
சாக்ஷியாயநம :
சாந்தாயநம :
சின்மாத்ராயநம :
சிவாயநம :
சூந்யாயநம : 60
மகாசூந்யாயநம் :
ஸ்வயம்பிரகாசாயநம :
ஸ்வப்பிரகாசாயநம :
சுத்தாயநம :
புத்தாயநம : 65
சுயம்புவேநம :
க்ஷேத்திரக்ஞாயநம :
திர்க்காயநம :
திர்ஸ்யாயநம :
நாநாரூபாயநம : 70
நிர்விகாராயநம :
நிஷ்கிரியாயநம :
நிர்ச்சம்பந்தாயநம :
நிர்லேபாயநம :
நிஷ்பலாயநம : 75
நிரூபாதிகாயநம :
நிரவயவாயநம :
நிர்விகல்பாயநம :
நிர்க்குணாயநம :
நிராகாராயநம : 80

ஓம்.

நிரீஸ்வராயநம :
நிரிந்திராயநம :
நிர்ஜ்ஜீவாயநம :
நிஷ்பிரகிர்தியேநம :
நிர்விசேஷாயநம : 85
நிஷ்ப்ரஞ்சாயநம :
நிரஞ்சநாயநம :
நித்தியாயநம :
நித்யாநந்தாயநம :
நித்யமுத்தாயநம : 90
நிராதாராயநம :
நிர்விஷயாயநம :
நிர்த்தோஷாயநம :
துரியாயநம :
துரியாதீதாயநம : 95
பரமார்த்தாயநம :
பரப்பிரஹ்மாயநம :
பிரத்தியக்ஷாயநம :
புராணாயநம :
புராதநாயநம : 100
புரணாயநம :
மகத்தாயநம :
முக்தாயநம :
வஸ்துவாயநம :
விபுக்தாயநம : 105
அதோமுக்யநம :
ஸ்ரீசற்குருவேநம :
சம்பூர்ணசமாப்தா. 108

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விவேகசட்கம்.

அனித்திய பூதத் தேகநா னன்று
விந்தியத் தரங்கநா னன்று
சனித்தவாங் கார பிராணவர்க் கங்க
ளன்றுநற் புந்தியு மன்று
தொனித்திடுந் தார மனைசெல்வங் களுக்குத்
தூரமாஞ் சாட்சிநா னென்றுந்
தனித்துநித் தியமாய்ப் பிரத்தியகான் மாவாந்
தற்பதப் பொருளதாஞ் சிவோகம்.

உற்பவன் விருத்த னன்றுநா னோர்கால்
லத்தினு நசிப்பவ னன்று
வற்பமாந் தேக காரிய மான
வவையெலா மகங்கரத் தல்லாற்
றற்பத வடிவாஞ் சின்மய மான
வெனக்கிலை சகளநிஷ் களமா
யெப்புறத் தேனு மெல்லையற் றிருக்கு
நின்பசிற் சொரூபமாஞ் சிவோகம்.

சத்திய ஞானா னந்தமாம் பிரமத்
துதித்திடு மாயையிற் சனித்த
மெத்துமிவ் வுலகஞ் சேதனத் திடையே
நசிக்குயஃ தேதெனை விளம்பிற்

றத்துசொப் பனமுஞ் சுழுத்தியி லசத்தாந்
தன்மைபோற் சத்திலா திருக்குஞ்
சுத்தபூ ரணமாய் நித்திய மாகித்
துலங்கிய சொரூபமாஞ் சிவோகம்.

பழுதைதன் னிடத்திற் பாம்புதோன் றுதல்போற்
பரப்பிர மத்திடை யதனிற்
கழிதரு மஞ்ஞா னத்தினாற் சீவ
னுதித்திடக் கண்டவ னொருவன்
பழுதையென் றதனாற் சர்ப்பமோ கமும்போய்ப்
பழுதையாய்க் கண்டது போல
வழிவிறே சிகனார் சீவனீயன்றென்
றடைந்திட'வாகினேன் சிவோகம்.

எமக்குமன் னியமா முலகமொன் றில்லை
யெவ்வுல கங்களெம் மிடத்திற்
சமித்துவுற் பவமா மாதலான் மாயை
வடிவம தேதெனிற் சாற்ற
வமைத்தகண் ணாடி விம்பமா நிழல்போ
லடங்கியெம் மிடத்தினில் விளங்குந்
தமத்துவ மில்லாச் சச்சிதா னந்த
தற்பத விமலமாஞ் சிவோகம்.

சாக்கிர மதனி லிந்திரி யங்க
டமக்குமேற் சாட்சியாஞ் சிவோகம்
தேக்குசொப் பனத்தி லுலகரூ பமதாய்ச்
செய்மனச் சாட்சியாஞ் சிவோகம்
தாக்கிய சித்த நாசமாஞ் சுழுத்தி
யவத்தையிற் சாட்சியாஞ் சிவோக
நீக்கமி றுரியா னந்தமாஞ் சர்வ
நிர்மல சாட்சியாஞ் சிவோகம்

முற்றிற்று.

ஓம்

தத்சத்

பரப்ப்ரஹ்மணேநம,

# த ச க ம்.

---

ஓதுமண்ணிலை யுதகமிங்கிலை யொளிருந்தேசிலை காலிலை
பூதவிண்ணிலை யிந்தியமிலை புகன்றவைகளின் றிரளிலை
யேதுமேவிப சாரமேவி யிறப்பதாலிச் சுழுத்தியின்
மீதுயாயுள பூரணானந்த மேனியான சிவோகமே.

சாதியுமிலை யாச்சிரமுமிலை சாதியாச்சிரம தருமமா
நீதியுமிலை தாரணையிலை நிதித்தியாசன யோகமே
யாதியுமிலை கற்பனையப வாதவாசிரய மாதலாற்
சோதியாய்நிலை நின்றபூரண சுத்தரூப சிவோகமே.

தந்தைதாயிலை தேவருமிலை தங்குலோகங் களுமிலை
சந்தவேதங்க ளில்லையாகங்கள் சகலதீர்த்தங் களுமிலை
தொந்தமற்ற சுழுத்தியிற்றொட ராதுநீக்குத லான்மகா
னந்தபூரண சத்தியகேவல ஞானநித்த சிவோகமே,

பன்னுசாங்கிய சைவமுமிலை பாஞ்சராத்திர முமிலை
யுன்னுசைனமீ மாஞ்சையுமிலை யுலகுண்மற்ற மதமிலை
துன்னுஞானிக ளநுபவப்பிர சித்ததூய சொரூபமாய்ப்
பின்னமேயற நின்றபூரணப் பிரமமென்ற சிவோகமே.

பகருமேலிலை கீழிலைப்பர வுள்ளிலைப்புற முமிலை
யகலமோநடு வில்குறுக்கிலை யாகிழக்கிலை மேற்கிலை
ககனமென்ன நிறைந்தகண்டசிற் கனகேவல ரூபமாய்ச்
சுககனச்சுக தாதிபேத விகீனசுத்த சிவோகமே.

வெள்ளையுமிலை கருமையுமிலை வேறுபீத சிவப்பிலை
குள்ளமுமிலை நெடியதுமிலை குறைபெருத்தலு மில்லையே

தள்ளியித்தனை ரூபமுந்தவி ராதசோதி சொரூபமா
யுள்ளபூரண ஞானவின்ப ரூபா திகின சிவோகமே.

சாத்திரந்தனைப் போதிப்பானில்லை சாத்திரம்படிப் பானில்லை
சாத்திரமில்லை பாடமுமில்லை சாற்றுநீலலை நானில்லை
சாத்தியாதி சகத்திலைச்சல மற்றுமிஞ்சுத லான்மகா
சாத்திரப்பொரு ளானபூரண சாந்தபோத சிவோகமே.

சாக்கிரமில்லை சொப்பனமில்லை சார்சுழுத்தி யில்லையிதிற்
றுக்குவிச்வனிற் றைசதனில்லை தங்குபிராஞ்ஞனு மில்லைமுன்
றுக்கையுமில்லை யவையவித்தை விகாரமாதலி ஞலிவை
நீக்கிநின்றிடு துரியபூரண நித்தபோத சிவோகமே.

அதிவியாபக மாதலாலழி வற்றதத்துவ மென்றதாற் [ததாற்
சுதசித்தப்பொரு ளானதாற்றனில் வேறொன்றைத்தொடரா
சததமாயுள சிவமொழிந்திவண் சகலமெனும்பொரு ளோயில்லை
யதுவிதென்றுரை செய்வதற்கரி தாமகண்ட சிவோகமே.

இல்லையேக மெனுஞ்சொலு மிரண்டென்றுசொல்லுவதெங்
யில்லைகேவல மோடகேவல மில்லைசூனியா சூனிய [ஙனே
மெல்லையற்ற வகண்டசிற்சுக வேகபூரண வத்துவாற் [வாம்
றெல்லைவேத ரூடிப்பொருடனைத் தோன்றவெப்படியோது

சச்சிதானந்தன் திருவடி வாழ்க

முற்றிற்று